Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 21 of 2021**

Deposition of P.W. 1 (L.W. 1 ) } Prosecution } Defence }

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திரு.வாசுதேவன் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 05.03.2026.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மெனசியில் குடியிருந்து வருகிறேன், விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு இரண்டு மகள், இரண்டு மகன்கள்

எல்லோருக்கும் திருமணம் ஆகி விட்டது. எதிரி என்னுடைய அண்ணன். கடந்த 10 வருடங்களாக எனக்கும் எனது அண்ணனுக்கும் வரப்பு தகராறு, தண்ணீர் இறைப்பில் தகராறு இருந்து வந்தது. 6 வருடத்திற்கு முன்பு சனவரி 8ம் தேதி மாலை 4, 4.30 மணியளவில் என் காட்டில் எரு கொட்டி கொண்டு இருந்தேன். என் அண்ணன் ராமதாஸ் வரப்பை வெட்டி கொண்டிருந்தார். நான் போய் கேட்டேன். அதற்கு அவர் மண்வெட்டியை எடுத்து பின்தலை, நெற்றியில், வலது முழங்கை பக்கம் அடித்தார், அதில் என் வலது கை பக்கம் ஒடிந்து விட்டது. அப்போது முருகேசனும், சங்கரும் பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். போலிசார் மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள், நான் நடந்ததை சொன்னேன். மேல் சிகிச்சைக்காக கோயமுத்தூர் கங்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் மண்வெட்டியால் தான் என்னை தாக்கினார். அந்த மண் வெட்டி **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனக்கு 25 வயது இருக்கும் போதே என் அப்பா, அம்மா இருவரும் இறந்து விட்டார்கள். என் அண்ணன் தான் எனக்கு திருமணம் செய்து வைத்தார் என்றால் ஆமாம். என் மனைவி பெயர் அம்பிகா. எனக்கு

அம்பிகா மூலமாக இரண்டு மகள்கள். இரண்டாவது மனைவி பெயர் தமிழ்மணி. அவர் மூலமாக எனக்கு சக்திவேல் என்ற மகன் உள்ளார். நான் 2வது மனைவியுடன் தான் 35, 40 வருடமாக இருந்து வருகிறேன். தமிழ்மணி ஏற்கனவே திருமணமானாவர். என் மகள்கள் இருவருக்கும் எதிரி தான் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரியல்ல. நான் தான் திருமணம் செய்து வைத்தேன், என் அண்ணன் உடன் இருந்தார். அம்பிகா என் அம்மாவின் உறவினர். அம்பிகாவை நான் சரியாக கவனிக்காததால் எதிரி என்னை கண்டித்ததால் அவருக்கும் எனக்கும் பிரச்சனை என்றால் சரியல்ல. என் மகள்களின் திருமணத்தை எதிரி தான் பார்த்தார் என்றால் சரியல்ல.

2) என் அப்பா இருக்கும் போதே எங்களுக்கு பாகம் பிரித்து கொடுத்து விட்டார். வரப்பு முதலில் 3 அடி இருந்தது. தற்போது 1 அடி தான் உள்ளது. நான் டிரேக்டரில் எரு எடுத்துவந்த நிலம் என்னுடைய நிலம், அதை நான் தனியாக வாங்கினேன். சம்பவ நடந்த வரப்பை கடந்து போனால் விஜயன் வீடும், வாசு வீடும் எதிர் எதிரே உள்ளது. அவர்களும் இந்த வரப்பு வழியாக தான் போய் வருகிறார்கள் என்றால் சரியல்ல. வரப்பு 15அடி அகலம் தான் என்றாலும் 3 அடி அகலம் என்றால் சரியல்ல. தற்போது 15 அடி மண் ரோடு உள்ளது. அதில்

டிரேக்டர் போகும் என்றால் சரிதான். சங்கர், முருகேசன் வரும் போது எதிரி ஓடி போய் விட்டார், நான் மட்டும் தான் இருந்தேன்.

3) ரோட்டிலிருந்து சம்பவ இடம் போகும் வழியில் தெற்கு புறம் மாரியப்பன், வடக்குபுறம் கண்ணன் வீடுள்ளது. கண்ணன் வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் 20 மீட்டர் தூரம் இருக்கும். விஜயன் வீட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் 100 மீட்டர் தூரம் இருக்கும். பைக்கில் என்னை சங்கா் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். மருத்துவமனையில் என்னை இன்ஸ்பெக்டா் விசாரித்தார். மருத்துவமனை போவதற்கு 6 மணி இருக்கும். போலிசார் என்னை மணிக்கு விசாரித்தார்கள் என்று நியாபகம் இல்லை. என்னை போலிசார் மருத்துவமனையில் மட்டும் தான் விசாரித்தார்கள். பிறகு என்னை விசாரிக்கவே இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை என்றால் சரியல்ல.

4) நான் கோயமுத்தூர் கங்கா மருத்துவமனைக்கு அன்று இரவே போய் விட்டேன். எத்தனை மணி சரியாக தெரியவில்லை. நான் கங்கா மருத்துமனை மருத்துவரிடம் 7ம் தேதி அடித்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல, என்னை மருத்துவர் விசாரிக்கவில்லை. அடிதடி கேசா என்று கேட்டார்கள், ஆமாம் என்று சொன்னேன். எதிரியே பலவீனம் ஆனவர் என்றாலும் அவரால் 15 அடி வரப்பை வெட்டுவதற்கு அவருக்கு உடலில் சக்திஇல்லை என்றாலும், சா.பொ.1ஐ தூக்கி அடிப்பதற்கு

அவருக்கு சக்தியே இல்லை என்றால் சரியல்ல. சா.பொ.1னால் எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் இரத்தம் தோய்ந்த என்னுடைய உடைகளை போலிசாரிடம் கொடுக்கவில்லை. எதிரி என்னை தாக்கவே இல்லை என்றாலும், ரத்தம் கசிந்து இருந்தால் ரத்தம் கசிந்த உடைகளை நான் போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. கங்கா மருத்துவமனைக்கு என்னை விஜயன் காரில் அழைத்து சென்றார்.

5) என் மனைவி, பிள்ளைகளை போலிசார் விசாரிக்கவில்லை. அவர்களை விசாரித்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் தான் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. கழனியை ஒட்டி ஒரு 5அடிக்கு சரிவான பள்ளம் உள்ளது என்றாலும் அதன் வழியாக தான் என் கழனிக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். அந்த 5 அடி பள்ளத்தில் நான் விழுந்து தான் காயம் ஏற்பட்டது என்றாலும், எதிரி மீது பகை காரணமாக அவர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.